அமரர்

# திருமதி. தங்கத்துரை தவமணி

அவர்களின்

நினைவாக வெளியிடப்படும்

# இதய தீபம்



04.11.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பின் உதயமே

ஆண்டவன் ஆட்கொண்டமுத்தே

இணையற்ற குடும்பத்தின் இனியவளே

ஈடில்லாச் சொத்தே

உயர் பண்பின் தூயவளே

ஊரார் புகழ வாழ்ந்தவளே

எங்கள் குலத்தின் சிம்மமே

ஏற்றத்திலும் பணிவு கொண்டாய்

ஐம்பூதங்களில் கலந்த உயிரே

ஒன்று பட்ட இணையழகே

ஓர் உயிராய்க் கலந்த உதயமே

உங்கள் ஆத்ம சாந்திக்காய்

ஒருங்கில் நின்றின்றோம்.

- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை மடியில்
01-07-1946

ஆண்டவனடியில்
05.10.2016

# அமரர்
# திருமதி. தங்கத்துரை தவமணி

## திதிவெண்பா

"பண்பார்ந்த பாதரசி தவமணி நல்லாள்
விண் சார்ந்துமேவி விளங்கிய நாள் – சீர்
ஆண்டு துர்முகி புரட்டாதி பூர்வபட்சம்
பூண்ட சதுர்த்தி திதியே போற்று"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர்களான அன்னையும் பிதாவும்



அமரர்கள் தங்கத்துரை தவமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமம் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தனைக்
காதலான் கூப்புவார்தம் கை

## தேவாரம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்து உதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லல் கண்டங் கொண்டடியேன் என் செய்கேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டி பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்வேண்டில் நான்
மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ்இருக்க என்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலம்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனாய் வாழ்வினைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா ஞான சற்குண நேயா
ஒப்பிலா மாமணித் திரிவாசா
வித்தகா ஞான சந்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# துங்கத்துரை தவமணி
### அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

நிலையில்லா மானுட வாழ்வில்
பிறப்பும் இறப்பும்
இன்பமும் துன்பமுமாய்
துயரும் குதூகலமுமாய்
இந் நிலையில்லா
மானுட வாழ்வில்.....

கோயிலும் சுனையும்
கடலுடன் சூழந்த
இயற்கை எழில்வீசும்
கோணைநாதன் குடி கொண்ட
திருகோணமலை தனில்
மூதூர் மேன்கமம்
சைவ உயர் வேளாளர்
குடியில் சின்னையா வள்ளிப்பிள்ளை
தம்பதிகளின் மூத்த மகளாக
வாழ்ந்தவரே

மேன்கமம் வித்தியாலயத்தில்
கல்வி கற்று நல்லாசிரியரின்
சிறப்பு மாணவியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவர் போற்றிட
இளமையில் கல்வி கற்று தேறிட.....
தையல் கலை போன்றவற்றில் சிறந்து
விளங்கியவர் அக்காலத்தில்
8ம் வகுப்புவரை படித்து
பெற்றோரின் விருப்பத்திற்கு இனங்க
கல்வியை இடைநிறுத்தினார்
அழகும் நற்குணமும்
தியாக சிந்தனையும்
இவரை ஈர்க்க

சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை
நற்சீலர்களின் உத்தம புத்திரனாய்
தங்கத்துரையை கரம் பற்றி
வாழ்ந்திட மக்களாய்
நிர்மலாதேவி, ரேவதி, உதயச்சந்திரன,
நோகலா, நவேந்திரராணி, சுகிர்தவாணி,
லேனுலோஜினி, புஸ்பதர்ஷினி, டினராஜ்
வந்துதித்தனரே

இன்பமாய் தம் மக்கள்
வாழ்வு சிறக்க நற்கல்வி
நற்பண்பு குணம் எல்லாமே
புகட்டி வளர்த்திட
தன் பிள்ளைகளின்
கல்வியில் கண்ணும்
கருத்துமாய் இருந்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் அரச பணி புரிய வேண்டும்
என்ற ஆசை கொண்டு
ஊக்க மளித்தவர்
அவர் கனவு நனவாகின

"ஈன்ற பொழுதில்
பெருதுவக்கும் தன் மகனை
சான்றோன் எனக் கேட்ட
தாய்" என்பதற்கிணங்க
மூத்த மகளை ஆசிரியராகவும்
இளய மகளை குடும்ப நல
உத்தியோகத்தராகவும் தனது
இளய மகனை ஆசானாகவும்
உருவாக்கி மகிழ்ந்தவர்
கல்வி, கேள்விகளில் ஞானம்
பெற்ற இவர் இராமாயணம்
மகாபாரதம் போன்ற இதிகாச
கதைகளையெல்லாம் கற்றுத்
தேறியவர் அதனை பிறரிடம்
கூறி இன்புற்று வாழ்ந்தார்

"ஐந்து பெண் பிள்ளை பெற்றால்
அரசனும் ஆண்டியாவான்"
என்பார்கள் ஆனால் ஏழு
பெண் பிள்ளைகளை பெற்று
கல்வி கற்பித்து நல்ல மருமக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளை திருமணம் செய்வித்து – மடி மீது
பேரப்பிள்ளை, பூட்டப்பிள்ளை வரை
கண்டு மகிழ்தவர்

காலனும் வந்தான் கொடுங்கயிறுடன்
2009 மே மாதம் தனது கணவரை
இழந்த வேளையிலும் துவண்டு போகாது
தம் மக்களின் வாழ்வே நமதென்று
வாழ்ந்தார்

இளைய மகனின் திருமணத்தை காணும்
ஆசையில் இருந்து வேளையில் காலனும்
வந்து உயிரைப் பறித்துச் சென்றானே
இருந்தாலும் தன் மகனை மற்றவர் மதிக்கும்
ஆசானாக உருவாக்கி சென்றார்.
காலம் கொடியது காலனும் வந்தான்
அவரது இன்னுயிர் ஆனது அவர்
வணங்கும் இஸ்ட தெய்வமான
பிள்ளையாரடி சேர்ந்தது இந்நாள்தனில்
அவரினை நினைத்து பிராத்திப்போமாக

**ஓம் சாந்தி.... சாந்தி.... சாந்தி**

**குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரங்கள் தீர

அன்பின் இலக்கணம் - என்
அன்னை நீயே அம்மா
ஆண்பிள்ளை வேண்டுமென்று
அன்னையே நீ
பலகாலம் தவமிருந்து
பல கஸரங்கள் அனுபவித்து
பத்துமாதம் சுமந்து என்னைப்
பெற்றெடுத்தாய்

உன் துயரங்கள் தீர
உன் உதிரத்தை கருவாக்கி - பாரில்
குருவாய் என்னை உருவாக்கினாயே
என் உயர்வுகள் ஒவ்வொன்றும் - பூமியில்
என்றும் உன் பெயர் சொல்லும் அம்மா
அன்னையே - நான்
எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும்
உனக்கு மகனாகப் பிறக்கும்
வரம் வேண்டும் அம்மா

**மகன்**

டினராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மம்மா

பார்ப்பதற்கு ஒரு குழந்தை போலவே இருப்பார்
பேசும் போது எங்களை விட்டுக் கொடுக்கமாட்டார்
என் இனிய அம்மம்மா
எங்களுடைய பெரும்பான்மையான இரவுகள்
அவளுடைய கதைகளுடன் முடிந்தன
என் இனிய அம்மம்மா
மரணமே வந்தாலும் உன்னை மறக்காத
இதயம் வேண்டும்
என் இனிய அம்மம்மா
மீண்டும் ஜனனம் எனன்றால் அதில் நீயே வேண்டும்
உறவாக அல்ல எனதுயிராக!
என் இனிய அம்மம்மா

**பேரப்பிள்ளைகள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய



# திருவாசகம்

### திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமனிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவா ருன்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி
சீரார் பெருந்துறை நந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன் யான்
கண்ணுதலான் தன் கருணை கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொழியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே யுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கி யென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக்குக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார்தங்கருத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே யென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவிஅறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

(சிவபுராணம் முற்றிற்று)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மத நம்பிக்கைகளும் சமய அல்லது விஞ்ஞான விளக்கங்களும்

**1. விரத நாட்களின் ஏன் எண்ணெய் தேய்த்துக் குளிக்கக் கூடாது?**

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதை மிகமுக்கியமாக் கருதும் இந்துக்கள் இப்படி ஒரு விதிவிலக்கு வைத்திருப்பதை மூட நம்பிக்கை என்று கூறினாலும் இதன் விஞ்ஞான விளக்கம் விரதநாட்களில் உடல் மற்றும் மனதுக்கு தூய்மை மிக அவசியமானதால், கிரகங்களில் இருந்து பூமிக்கு வரும் காந்தசக்தி அலைகள் உடலுக்கு மிக அவசியமாகின்றது சனிக் கிரகத்தின் சக்தியிலிருந்து உருவானதாக கருதிவரும் எண்ணெய், தலையைச் சுற்றிலும் ஓர் புகை வளையத்தை உருவாக்குகின்றது. இது உடலுக்குள் அலைகள் புகுவதைத் தடை செய்கிறது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**2. குளித்ததும் முதலில் முதுகைத் துடைக்க வேண்டும் என்பது ஏன்?**

இதில் சுவாரசியமாக சமய விளக்கம் நம் உடலில் எப்போதும் இரண்டு சூழ்நிலைகள் உள்ளன. அதாவது நன்மை என்ற ஸ்ரீதேவியும், தீமை என்ற மூதேவியும் ஆகும். நாம் தலையில் நீருற்றும் போது ஸ்ரீதேவியும், மூதேவியும் உடலில் இருந்து வெளியேறி விடுகின்றனர். பின் உடலின் எந்த பாகத்தில் முதலாவது ஈரம் துடைத்து சுத்தமாகின்றதோ அப்பாகத்தில் முதலில் மூதேவி நுழைவது வழக்கம் இரண்டாவதாக முகம் துடைத்தால் அங்கு ஸ்ரீதேவி நுழைந்து நாள்முழுவதும் நன்மை தரும் முகத்துடன் வீற்றிருப்பாள். மறாக முதலில் முகத்தை துடைத்தால் மூதேவி புகுந்த முகத்துடன் அன்றைய நாள் அம்போ அதனால் முதலில் முதுகை துடைத்து பின்முகம் துடைக்க வேண்டும். என்ற இக்கருத்தை இன்றைய தலைமுறையினர் மூட நம்பிக்கை என்று உதறிவிட்டாலும், அதன் அறிவியல் விளக்கம் என்ன வென்றால் குளிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது நம் உடலின் எல்லாப் பாகங்களிலும் குளிர் பரவுகின்றது. மிக அதிகமாக குளிர் தேக்கப்படுவது. முதுகிலாகும். முதுகெலும்பில் அதிக நேரம் குளிர் இருந்தால் முள்ளந்தண்டு நோய் ஏற்பட வாய்ப்புண்டு. இதன் தீமையைத் தவிர்க்கவே குளித்த உடன் முதுகைத் துடைக்க வேண்டும் என்பதே

**3. பெற்றோரைத் தினமும் கால்தொட்டு வணங்க வேண்டுமா?**

தாய் தந்தையருக்கும் குருவுக்கும் ஒரு மலர்ந்த புன்னகை கூட தர முடியாத இன்றைய சிலருக்கு இது ஒரு வேப்பங்காய் விடயம். பெரியோர்களுக்கு நாம் மதிப்பைத் தெரிவிப்பதற்கு நான்கு ஆசாரங்களை வழக்கமாக கொண்டுள்ளோம். முதலாவது வணக்கம் என்று கூறுவது. இரண்டாவது எழுந்து நிற்பது, மூன்றாவது கால் தொட்டு வணங்குவது, நான்காவது சாஷ்டாங்க வணக்கம் தெரிவிப்பது. பெற்றோர் நமக்கு செய்த சேவைகளை நினைத்துத்தான் அவர்கள் பாதம் தொட்டு வணங்குகிறோம். அவர்களின் ஆசியையும் பெறுகிறோம். பெற்றோரை வணங்குதல் குடும்பத்தில் பாசத்தையும், ஒற்றுமையையும், மகிழ்வையும் நிம்மதியையும் தருகிறது. யோகாசனம் சிறந்த உடற்பயிற்சியாக ஏற்றுக்கொண்டுள்ள இன்றைய உலகம் காலையில் கால்தொட்டு வணங்குதல், சாஷ்டாங்க வந்தனம் என்பனவற்றை சிறந்த உடற்பயிற்சியின் ஓர் அங்கமாகவும் ஏற்றுக் கொண்டுள்ளது.

**4. சங்கு ஊதுவதில் என்ன மகத்துவம்?**

இறைவனைச் சார்ந்த 'ஓம்' எனும் மங்கள ஓசையே சங்கிலிருந்து எழும் ஓசையாகும். சங்கிலிருந்து கேட்கும் ஒலி அலைகளைப் பெற்றுக் கொள்ளும் நபரின் மூளையில் நன்மை தரக்கூடிய அதிர்வுகள் உண்டாகின்றன என்று நவீன விஞ்ஞானம் கருதுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. குத்துவிளக்கிற்கு ஏன் எள்எண்ணெய் ஊற்றி எரிக்கின்றனர்?**

சனி பகவானைத் துதித்து ஆசி பெறவே எள் எண்ணெய் உபயோகிப்பது வழக்கம் எள் எண்ணெயில் இரும்புச்சத்து அடங்கியிருப்பது நம்மில் பலருக்கு தெரியாது. ஆனால் பண்டைக் காலத்தில் விளக்கிற்கும், குளிப்பதற்கும், சமையலுக்கும் இதனைப் பயன்படுத்தி வந்தனர். இதனாலேயே பழங்காலத்தவர்களில் இரும்புச்சத்து அதிகமாக இருந்து நீண்ட ஆயுளைக் கொண்டவர்களாக வாழ்ந்தனர்.

**6. பொரித்த எண்ணெய்யில் விளக்குப் பற்ற வைக்கலாமா?**

பொரித்த எண்ணெய்யை விளக்கிற்கு ஊற்றக்கூடாது என்பது முன்னோர்கள் வகுத்த விதி ஒருமுறை உபயோகித்த எண்ணெய்யை மறுமுறை சூடாக்கும்போது அதில் காபன் உருவாகும். அவ்வாறு உருவான காபனால் உணவுப் பொருட்களுக்கும், சூழலுக்கும் தீங்கு ஏற்படுகிறது.

**7. குத்து விளக்கில் எத்தனை திரிகள் ஏற்ற வேண்டும்.?**

இதற்குசமய விதியின்படி ஒற்றைத்திரி நோயின் அடையாளம் என்றும், மூன்றுதிரி அலட்சியத்தின் இலட்சணம் என்றும் நான்கு திரி தரித்திரம் என்றும் இரண்டு திரியை கிழக்கு நோக்கியும், மேற்கு நோக்கியும் ஏற்றினால் உத்தமம் என்றும், ஐந்து திரிகள் ஏற்றுவது மிகமிக உசிதமானது என்றும், செல்வத்தைக் கொடுக்கும் என்றும் கூறப்படுகிறது.

விஞ்ஞானமுறைப்படி திரிகள் ஏற்றும் முறை "டெனசிங்காரட்" என்ற கருவியால் ஆய்வு செய்யப்பட்டது. இதில் ஒன்று மூன்று நான்கு திரிகள் எரியும் விளக்கிலிருந்து எதிர்மறையான சக்திகள் வெளிப்பட்டது என்றும், இரண்டு, ஐந்து திரிகள் ஏற்றப்பட்ட விளக்கிலிருந்து அனுகூலசக்தி வெளிப்பட்டது எனவும் கண்டறியப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8. மாலைப்பொழுது சாய்வதற்கு ஒரு நாழிகை நேரத்திற்கு முன்பு தீபமேற்றுவது ஏன்?**

பொழுது சாயும்போது தீமையின் சின்னமான மூதேவி வீடு வந்து சேரும் என்றும், ஒரு நாழிகையின் முன்பு விளக்கேற்றினால் நன்மையின் சின்னமான ஸ்ரீதேவியை வீட்டிற்குள் அழைக்கலாம் என்பது முன்னோர்கள் கருத்து.

விஞ்ஞான ரீதியாக மாலைப்பொழுது வரும்போது சுற்றுச்சூழலில் விஷ அம்சப் பாதிப்பு உண்டாகிறது. என்றும் அதனால், ஒரு நாழிகை அதாவது 24 நிமிடங்கள் முன்னதாக விளக்கைப் பற்ற வைத்தால் எரியும் தீபஒளி வளையத்துள் விஷ அம்சம் நுழைவது தடைப்படுகிறது என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**9. குத்துவிளக்கை கொழுத்தும் போது வடக்குப் பக்கத்து வாசல் கதவை மூடவேண்டுமென்பது ஏன்?**

தென்துருவத்திலிருந்து வடதுருவத்திற்கு காந்தசக்தி செல்லுகின்றது. எனவே விளக்குக்கொழுத்தும் நேரம் வடக்குவாசல் திறந்திருந்தால் விளக்கின் சுடரின்சக்தி காந்தசக்தியுடன் வெளியேறாமலும், வாசல் வழியாக விஷஅணுக்கள் நுழைவதையும் தடுக்கவே வாசல் கதவு மூடப்படுகிறது. விளக்கு எரியும் எண்ணையும் சூடேறியதும் உயரும் பிராண சக்தி விஷ அணுக்களை தடுக்கும். இது காந்தப் பிரவாகத்துடன் செல்லாமலிருக்க வடக்கு வாசல் கதவு மூட வேண்டும்.

**10. முற்றம் பெருக்கிக் கூட்டி நீர் தெளித்த பின்னரே மாலை விளக்கு கொளுத்துகின்றனர் ஏன்?**

சுற்றுச் சூழலை சுத்திகரித்து சூழலைத் தூய்மையாகப் பாதுக்காக்கவே இது செய்யப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. வடக்கு திசையில் தலைவைத்து ஏன் படுக்கக்கூடாது**

வாஸ்து சாஸ்திரப்படி வடக்கு, தெற்கில் தலைவைத்து தூங்கக்கூடாது. கிழக்கில் தலைவைத்து படுப்பது உத்தமம், இயலாவிடின் தெற்கில் தலைவைத்து படுக்கலாம். வடக்கே தலைவைத்துப் படுக்கும் போது பூமியின் காந்த மண்டலமும், மனித உடலின் காந்த மண்டலம் எதிர்த்து செயற்படும் நிலை ஏற்படுகிறது. மனித உடலிலும் மிகக் குறைந்தளவு காந்தசக்தியுள்ளது. என்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே வழக்கமாக வடக்கே தலைவைத்து படுப்பதால் மனிதன் ஹிஸ்டீரியா எனும் நோயின் பாதிப்புக்குள்ளாகிறாள் என நவீன மருத்துவம் கூறுகிறது.

**12. ஆடிமாதம் திருமணம் நடத்தலாமா?**

திருமணம் என்பது மனதாலும், உடலாலும் மிகவும் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டிய வைபவமாதலால் இதற்கு மிகக் கவனம் தேவை. ஆடிமாதம் பொதுவாக உடல்நலத்திற்கு உகந்த மாதம் அல்ல. இயற்கையும் உடல் நலத்திற்கு பிரதிகூலமாகவே இருக்கும். இதனாலேயே ஆடிமாதத்தில் திருமணம் போன்ற வைபவங்கள் நடப்பது தடைவிதிக்கப்படுகிறது.

**13. மனைவி கர்ப்பிணியாக இருக்கும் போது கட்டடவேலை செய்யலாமா?**

வீடு கட்டும்போது ஒருவரது முழுக் கவனமும், சக்தியும் அதன் மேலேயே இருக்க வேண்டும், வீடு கட்டும்போது வீட்டுத் தலைவன் வீட்டில் செலுத்த வேண்டிய கவனத்துடன் கர்ப்பிணியான மனைவியின் மேலும் கவனம் செலுத்த வேண்டும். இரண்டும் சமமான கவனம் தேவைப்படுகின்ற விஷயங்கள் இவையிரண்டும் ஒரே நேரத்தில் வந்தால் கவனிக்க முடியாமல் போவதோடு மிகையான பணச்செலவும் ஏற்படுவதால் இவ்விதி நடைமுறைக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14. மரண வீட்டுக்கு சென்று வந்தால் தோய்ந்துக் குளிக்க வேண்டுமா?**

ஒருவர் இறந்தபின் அவர் சடலத்திலிருந்து ஏராளமான விஷக்கிருமிகள் சூழலுக்குப் பரவுகிறது. சடலத்தைத் தொடவோ அதனருகில் செல்லவோ செய்யும் போது விஷக்கிருமிகள் செல்பவரின் உடலிலும் உடையிலும் சென்று தங்கி விடுகின்றன உடலில் தண்ணீர் விழுந்து குளிரும்போது மூளையிலிருந்து மின்சக்தி பெறப்பட்டு உடல் முழுவதும் புதிய சக்தியைப் பரப்புகிறது. இதனால் விஷ அணுக்கள் அழிகின்றன. உடைகளில் இருக்கும் கிருமிகளும் தோய்க்கும்போது அழிந்து விடுகின்றன.

**15. உடைத்த தேங்காயை மலர்த்தி வைக்கலாமா?**

உடைத்த தேங்காயை மலர்த்தி வைப்பதனால் கரப்பான், பல், எலி போன்ற தீய பிராணிகள் அதை உண்டும், நக்கியும் செல்லும் இதிலிருந்து விஷக்கிருமிகள் படிந்து நோய் உருவாகும் எனவே உடைத்த தேங்காயை மலர்த்தி வைக்க கூடாது.

**16. வாசற்படியில் உட்காரக் கூடாது ஏன்?**

'டொசிங்ராட்' என்ற கருவியின் பரிசோதனையின்படி வாசற்படியிலிருந்து எதிர்ச்சக்திகள் (நெகடிவ் போர்சஸ்) வெளியேறுவது அவதானிக்கப்பட்டது. இதனால் வாசற்படியில் உட்காரும்போது உடலினுள் எதிர்ச்சக்திகள் உட்புகுந்து விடும்.

**17. படிகமாலையின் நன்மை என்ன?**

இதை அணிந்திருந்தால் எந்தக் காலத்திலும் வெப்பத்தைக் தடைசெய்யும் சக்தி இம்மாலைக்குண்டு. இது அணிய உத்தமமான நட்சத்திரம் கார்த்திகை நட்சத்திரம், கிரகங்கள் மனிதரில் செலுத்தும் செல்வாக்கைக் கட்டுப்படுத்த உதவுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவுவேளை இம்மாலையைத் தண்ணீரில் இட்டுவைத்து மறுநாள் காலை அத்தண்ணீரைக் குடித்தால் ஆண்மை விருத்தியடையும் என்றும், பௌர்ணமி நாட்களில் இதை அணிந்தால் உடலில் சக்தி கூடும் என்றும் சொல்லப்படுகிறது.

**18. உருத்திராக்கம் அணிந்தால் பாவம் தணியுமா?**

உருத்திராக்கம் அணிபவர்கள் அசைவ உணவு அருந்தக் கூடாது. போதைப்பொருள், மதுபானம் அருந்தக்கூடாது, சிவப்பு வெங்காயம், வெள்ளைப்பூடு, முருங்கைக்காய் உண்ணக்கூடாது. என்றும் இறைவனின், அருகாமை கிடைக்கப்பெறும் என்றும் மதநம்பிக்கையும், மருத்துவ குணங்களைப் பெறலாம் என மருத்துவத்துறையும் கூறுகிறது. உருத்திராக்கம் எவரும் அணியலாம் என்றும், அணிந்தாலே பாவங்கள் அழிந்துவிடும், தொட்டால் சுவர்க்கம் கிடைக்கும், அணிந்தால் மோட்சம் கைகூடும் என்றும் வியாசர் கூறியுள்ளார். உருத்திராக்கம் கழுத்தில் அணிவதனால் புற்றுநோய்கள் கூட தணியும் என அண்மையில் ஆராய்ச்சிகள் கூறுகின்றன. பித்தம், தாகம், விக்கல், கபம், வாதம் தலைவலி என்பனவற்றிற்கு உருத்திராக்கம் மருந்தாகும் என ஆயர்வேதம் கூறுகிறது.

**19. விஷ்ணு பூஜைக்குள்ள பூக்கள் எவை?**

கிருஷ்ணதுளசி, ராமதுளசி, வெள்ளைத்தாமரை, செந்தாமரை, பிச்சகம், ஜாமந்தி, முல்லை, காக்கத்திமுல்லை, நாகம், காட்டு செண்பகம், குவளை, நீலத்தாமரை, கைதை, புதுமுல்லை, சிவப்புமுல்லை என்பன

**20. தலைக்குப் பின்னால் கை கட்டலாம்?**

இவ்வாறு கைகளைக் கட்டினால் தலையிலுள்ள வர்மஸ்தானங்களுக்கு கேடு நேரும் இரத்த ஓட்டத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பாதிக்கும் எந்த வர்ம ஸ்தானத்திலும் நிரந்தரமான அழுத்தம் செலுத்துவத தீங்கானது எனவே தலைக்குப் பின்னால் கைகட்டக் கூடாது.

**21. பெண் ஆணுக்கு இடதுபக்கம் ஏன் அமரவேண்டும்.?**

பெண்ணின் வலதுபக்கமாக செயல்பட வேண்டியது ஆணும், ஆணின் இடதுபாகம் பெண்ணும் என்பது அர்த்தநாரீஸ்வரரின் நம்பிக்கையே ஆனால் நவீன சாஸ்திரமும் ஒரு உடலின் வலது பாகத்தில் ஆண் ஜீவணுக்களும் இடது பாகத்தில் பெண் ஜீவணுக்களும் உள்ளன என்று விங்ஞானமும் கூறுகிறது.

**22. நெஞ்சில் கைகட்டித் தூங்கலாமா?**

இப்படி கைகட்டுதல் இதய அசைவுகளைப் பாதிக்கும், இருதயத்திற்கு மேல் மிகையான அழுத்தம் ஏற்படும் இதனால் சுவாசத்திற்கு தடை ஏற்படலாம். இப்படி உறங்குபவர்களில் பலருக்கு இருதய நோய் பாதிப்பு உண்டானதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. எனவே நெஞ்சில் கைகட்டித் தூங்கக் கூடாது.

**23 ஆரத்தி எடுப்பதன் பின்னுள்ள இரகசியம் என்ன?**

தண்ணீரில மஞ்சள் அரைத்துச் சேர்த்து அதில் சிறிது சுண்ணாம்பு இட்டு அதனை ஒரு பரந்த பாத்திரத்தில் எடுத்து தீச்சுடர்கள் ஏற்றி குறிப்பிட்ட நபரோ, திருமண தம்பதிகளுக்கோ ஆரத்தி எடுப்பது வழக்கம் இங்கு மஞ்சள் சுண்ணாம்பு என்பன கிருமிகளை அழிக்கும் திறன் கொண்டவை எனவே இதுவே ஆராச்சியின் நோக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாளயம்

புரட்டாதி மாதம் கிருஷ்ணபக்க பிரதமை முதல் சுக்கில்பக்க பிரதமை வரையுமுள்ள பதினாறு தினங்களாகும். (கன்னிராசியில் சூரியன் இருக்கும் காலமாகும்.) இக்காலங்களில் 16 நாட்களும் தர்ப்பணம் வழிபாடு என்பன செய்ய வேண்டும். இப்பதினாறு நாட்களையும் சேர்த்துத்தான் தொண்ணூற்றாறு நாட்கள் கணக்கிடப்பட்டுள்ளன. பொதுவாக சுக்கிலபக்க பிரதமை மகாளயதினமாக எடுப்பதில்லை. மகாளயபக்ஷித்தில் இறந்த ஒருவருடையய உறவினர் அவர் இறந்த திதியை உத்தேசித்து அது பூர்வபக்கமோ அல்லது அபரபக்கமாக இருந்தாலும் அத்திதியை மகாளய பஷத்திதியில் அதே திதியில் செய்வர். உதாரணமாக சப்தமிதிதியில் ஒருவர் இறந்தால் சப்தமிதிதியில் செய்தல் சிலர் சம்பிரதாயம் ஆகும்.

மஹாயள பக்ஷித்தில் வரும் பரணிக்கு "மஹாபரணி" என்றும் திரயோதசிக்கு கஜச்சாயை என்றும் மத்தியாஷ்டமிக்கு கயை என்றும் பெயர். இவைகளில் சிராத்தமும், தர்ப்பணமும் செய்வது மிகுந்த பலனைத் தரும் என்பதும் கூறப்பட்டுள்ளது. மகாளய பக்ஷித்தின் முடிவாக அமாவாசையைக் கொண்டு பிதிர்வழிபாட்டிற்குரிய தினமான அமாவாசையை முன்னிட்டு அன்றைய தினம் பலர் மகாளயம் செய்வர்.

எவ்வாறாயினும் மகாளய பக்ஷிகாலத்தில் பிதிருக்கள், பிரேததகனங்கள், யமபட்டணத்தில் துன்புறுபவர்கள் முதலியோர். தமக்கான பிண்டம் தர்ப்பணம் என்பவற்றை எதிர்பார்ப்பார யமனானவன் தனது "சம்யமணி" என்ற பட்டணத்தில் துன்புறம் பல பிதிருக்களையும் பிரேத கணங்களையும் (சிறையில் இருந்து சற்று நேரம் வெளியில் விடுவது போல்) ஒன்று கூட வைத்து சுதந்திரமாக விடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் ஒன்று கூடுவது மகாளயம் எனப்படும். இவ்வாறு வெளியில் உலாவும் பிதிருக்கள் தம்மை நோக்கிப் பூலோகத்தில் இருந்து தமது உறவினர்கள் எள்ளுந் தண்ணீரும், பிண்டமும் தரமாட்டார்களா என மகாளயபக்ஷி நாள் முழுவதும் எதிர்பார்த்து நிற்பார். அவ்வாறு தம்மை நோக்கி எதுவும் செய்யாது விட்டால் சாபம் போட்டுத் திரும்புவார்கள் என்ற நம்பிக்கை நிலவகிறது. இதனால் மக்கள் மத்தியில் மகாளயம் அவசியமாகச் செய்யப்படுகின்றது. மகாளய பக்ஷிகாலத்தில் குறித்த ஒருவனை மாத்திரம் நினைத்துச் செய்யாது தாய், தந்தையருடன் காருணீக பிதிருக்கள் எனப்படும். எல்லா இறந்த பிதிருக்களுக்காகவும் செய்யப்படுவது பிரதானமாகும். இவர்கள் "உபய வம்ச காருண்ய பிதிருக்கள்" எனப்படுவர் இவர்களில் இறந்து போன சிறியதகப்பன், பெரியதகப்பன், அண்ணன், தம்பி, பிள்ளை, அத்தை மாமா, பெரியதாய், சிறியதாயார், அத்தான், மைத்துணன் என்பவர்கள் அடங்குவர் அத்துடன் சினேகிதன் குரு யஜமானன் என்பவர்களைக் குறித்தும் செய்யலாம் எனப்படுகிறது. மேற்கூறிய கருத்துக்கள் ஆபஸ்தம்பரால் கூறப்படுவதாக தர்மசாஸ்திர சிராத்த காண்ட சுருக்கத்தில் உரையாசிரியர் அண்ணா அவர்கள் கூறகிறார்கள்.

அத்துடன் ஆயுதங்கள், இடிவிழுதல், முதலிய துர்மரணங்கள் இறந்தவர்களுக்கம் மகாளய பட்சத்தில் வரும் சதுர்த்தசியில் ஏகோதிஷ்ட விதானமாகச் (இறந்தவரைக்குறித்து) சிராத்தம் செய்ய வேண்டும். என "வைத்தியநாத தீஷிதம்" கூறகிறது. எனவே எந்த வகையிலாவது மகாளய பட்சத்தில் சிராத்தம் செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

மகாளய பட்சம் முழுவதும் செய்ய முடியாது விட்டாலும் ஒரே நாளில் செய்வது "ஸ்ருதி மகாளயம்" என்று அழைக்கப்படும் அம் மகாளய சிராத்தம் வைதிகர்களால் மேற்கொள்ளப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாளயத்தில் விஸ்வதேவர்களின் பெயர் துரி, லோசனன் என்று குறிப்பிடப்படுகிறது. வருடசிராத்தம், சபிண்டிகரணம், மகாளயம், சுபகார்யம் என்பவற்றிற்குத் தனித்தனிப் பிதிர்த்தேவர்கள் இருப்பதால், ஒவ்வொரு காயத்திற்கும் அந்த அந்தத் தேவர்கள் பங்கு கொண்டு பலனை அளிப்பர் என நம்பப்படுகிறது.

## அமாவாசை (12) (அமாவாஸ்யா தர்ப்பணம்)

ஒவ்வொரு மாதமும் வரும் அமாவாசைக் காலங்களில் பிதிருக்களுக்குத் தர்ப்பணம் செய்ய வேண்டும். வைதிகர்களில் பெரும்பாலானோர் இதனை மாதாமாதம் செய்வர். சைவர்கள் குறிப்பாக ஆடி அமாசாசையை செய்வர்.

பகல் தேவர்களுக்குரிய காலமாகவும், இரவு பிதிர்களுக்குரிய காலமாகவும் இருப்பது போல் உத்தராயணம், தக்ஷிணாயனம் பிதிர்களுக்குரிய காலமாகக் கூறப்பட்டுள்ளது. எனவே தட்ஷநாயன ஆரம்பமாதம் ஆடி ஆகும் அம்மாதத்தில் வரும் அமாவாசை சைவ மக்களால் கொண்டாடப்படுகிறது. அமாவாசைக்காலத்தில் இறந்த சகல பிதிருக்களும் நினைக்கப்படுகின்றனர். அமாவாசை காலத்தில் தர்ப்பணம் செய்யப்படாத ஆத்மாக்களுக்காகவும் வைதிகர்களால் தர்ப்பணம் செய்யப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

நாட்டு மக்களின் நன்மைக்கா அந்தணர்கள் ஆலயங்களில் பூஜை நிறைவில் "சர்வே ஜனா சுகினோபவந்து" என வேண்டுவது போல்.

இந்த சகல ஆத்மாக்களின் நன்மைக்காக அமாவசைத் தர்ப்பண முடிவில் பின்வருமாறு கூறித் தர்ப்பணம் செய்வது குறிப்பிடத்தக்கது. எவர்களுக்குத் (தர்ப்பணம் செய்வதற்கு) தாயோ, தந்தையோ சிநேகிதரோ, உரிமையாளர்களோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினரோ இல்லையோ அவர்களெல்லோரும் நான் தர்ப்பை நுனியால் விடும் தீர்த்தத்தால் திருப்தியடையட்டும்.

இது அந்தணர்களின் பொதுத்தர்மமாக இருப்பது கவனிக்கத்தக்கது. பஞ்சாங்கத்தில் சிராத்ததிதியில் அமாவாசை எனக் குறிக்கப்பட்ட தினத்தில் அமாவாசை தர்ப்பணம் செய்தல் வேண்டும் பஞ்சாங்கத்தில் சில மாதங்களில் போதாயன அமாவாசை எனவும் குறிப்பிடப்பட்டிருக்கும். அது போதாயன சூத்திர மரபினரால் பின்பற்றப்படும் அமாவாசைத் தர்ப்பணத்திற்கு உரிய காலமாகும்.

**சிராத்த காரியத்தின் போது சில பொது விடயங்கள்**

ஒருவர் இறந்த திதியைக் கொண்டே சிராத்தம் நிச்சயிக்கப்படுகிறது. ஒரு மாதத்தில் இரு தடவைகள் சிராத்தத்திதி வந்தால் பின்னைய திதியினைக் கைக்கொள்ள வேண்டும் சிராத்தம் செய்யும் தினத்தில் ஆசௌசம் இருக்குமாயின் குறிப்பிட்ட அந்த ஆசௌசம் கழிந்த தினத்தில் சிராத்தம் செய்ய முடியாவிட்டால் அம்மாத அமாவாசையில் அல்லது ஆடி அமாவாசையில்(தந்தைக்கு) தாய்க்காயின் சித்திரா பூரணையில் அச்சிராத்தம் செய்யப்பட வேண்டும்.

**சிராத்தத்தில் பெண்ணின் நிலைப்பாடு**

- சிராத்தம் செய்யும் கர்த்தாவின் மனைவி வீட்டு விலக்காக இருந்தால் அன்று சிராத்தம் செய்யாது மனைவிக்கு வீட்டு விலக்கு வந்து ஐந்தாம் நாள் செய்தல் வேண்டும்.
- விதவைப் பெண் வீட்டுக்கு விலக்காயிருக்கும் போது தன் கணவனின் சிராத்தம் வந்தால் வீட்டு விலக்கு வந்து ஐந்தாம் நாளே சிராத்தம் செய்யப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிராத்தத்திற்காகச் சமையல் ஆரம்பமாகி பின்பு ஆசௌசம் வந்தால் அச்சிராத்தம் முடியும் வரை அசௌசம் அவரைப் பற்றாது.

## ஒருவருடைய இறந்தமாதம் திதி, பட்ஷம் தெரியாது விட்டால் சிராத்தம் செய்யும் முறை

- ஒருவருடைய இறந்த மாதம் தெரியாது திதி மாத்திரம் தெரிந்தால் அவருக்கு ஆடி பூரட்டாதி, மார்கழி, மாசி ஆகிய மாதங்களில் ஒன்றில் அவர் இறந்த திதியில் சிராத்தம் செய்ய வேண்டும்.
- ஒருவருடை இறந்த மாதம் தெரிந்து திதி தெரியாது விட்டால் அவர் இறந்த மாதத்தில் அட்டமி அல்லது ஏகாதசி ஆகிய திதியில் சிராத்தம் செய்யப்பட வேண்டும்.
- தாய் தந்தை இருவரது சிராத்தமும் ஒரே நாளில் வந்தால் நன்றாக சமையல் செய்து இரு சிராத்தமாக செய்யப்பட வேண்டும்.
- ஒருவர் மறதியினால் சிராத்தம் செய்யாது விட்டால் அவர் அந்த மாதத்து தேய்பிறை அட்டமி ஏகாதசி, அமாவாசை ஆகிய ஏதாவதொரு நாளில் தவற விடப்பட்ட சிராத்தத்தினைச் செய்ய வேண்டும்
- ஒருவருடைய தாய் இறந்த ஒருவருட காலத்துக்குள் தந்தை இறந்து விட்டால் தந்தையின் சிராத்தத்துட் தாயின் சிராத்தத்தினை செய்து கொள்ள வேண்டும். அதே போன்று தந்தை இறந்த ஒரு வருட காலத்துள் தாய் இறந்து போனால் தாயின் சிராத்தத்துடன் தந்தையின் சிராத்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

## அமரர்
## திருமதி. தங்கத்துரை தவமணி

அவர்களின் மறைவைக் கேட்டவுடன் ஓடோடி வந்து ஆறுதல், கூறியதுடன் அஞ்சலி செலுத்திய நல் நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். அன்னாரின் இறுதி சடங்குகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியவருக்கும் மலர் வலயங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் பதாதை காட்சி படுத்திய சக உத்தியோகத்தர்கள் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த நல் உள்ளங்களுக்கும் பல வகையிலும் உதவிய உற்றார் உறவினர் அயலவர் நண்பர்களுக்கும் இந் நூலினை மெருகூட்டும் வண்ணம் தன் கடமைகளை பொருட்படுத்தாமல் நாங்கள் எப்போது உதவி கேட்டாலும் எமக்கு கூடுதல் ஒத்தாசை வழங்கி அண்ணா உமாசங்கர் அவர்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**- குடும்பத்தினர் -**



**மேன்கமம்**
**மூதூர்**


- தொகுப்பாசிரியர் : சுந்தா (0756901316)
- அச்சு : ஏ.ஆர்.டிரேடர்ஸ் 0777695656


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள்

- சின்னையா + வள்ளிப்பிள்ளை
  - ↓ தவமணி
- சுப்பிரமணியம் + பசுபதிப்பிள்ளை
  - ↓ தங்கத்துரை

தவமணி + தங்கத்துரை ↓

- நிர்மலாதேவி + பவளகாந்தன்
  - ↓ தினேஸ்காந், சதீஸ்காந், அனுஸ்காந், நிரோஸ்காந், நிரோஜனி
- ரேவதி + சிவானந்தராசா
  - ஜீவாநந்தினி + தினேஸ்நாதன் (மோட்சம்)
    - ↓ பிரவீண்
  - ரூபேந்தினி
  - ரேகாந்தினி + சதீஸ்வரன்
    - ↓ சுலக்ஷன்
- உதயசந்திரன் + தயானி
  - ↓ நர்மதன், தருமிதன், அன்சிகா
- நோகலா + செல்லக்குமார்
  - ↓ நிக்ஷனா
- நவேந்திரராணி + ஜீவரெட்ணம்
  - ↓ ரிலக்ஷன், டிலக்ஷா, ஜனுஷா, திவேஸ்
- சுகிர்தவாணி + நிஷாந்தன்
  - ↓ கிரிஜன், டினுஷிகா
- லேணுலோஜினி + மன்னவன்
  - ↓ தருநிதன்
- புஸ்பதர்சினி + ஸ்ரீசங்கர்
  - ↓ கபிஸ்ஷன்
- டினராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

on.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org